## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



19-03-2025 நிகழ்வுகள்

## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. போலி காணொலிகள், படங்கள் - தடுப்பு நடவடிக்கை என்ன?**

**தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி கேள்வி**



சைபர் பாதுகாப்பு குறித்து நாடாளுமன்றத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரம் பின்வருமாறு:

சைபர் பாதுகாப்பு நிறுவனமான McAfee நடத்திய கணக்கெடுப்பின்படி 75% இந்தியர்கள் ஏதேனும் ஒரு வகையான போலியான செய்திகளையும் படங்களையும் பார்க்கின்றனர் என்பதையும், குறைந்தது 38 சதவீதத்தினர் போலிபடங்கள் மற்றும் காணொலி மோசடிக்கு இலக்காகி யுள்ளனர் என்பதையும் அரசாங்கம் அறிந்திருக்கிறதா?

இணையத்தில் உள்ள deepfake content எனப்படும் போலியான செய்திகள் மற்றும் மோசடிகள் தொடர்பான பிரச்சினைகளை தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

போலிகளை அடையாளம் கண்டு கொள்வது மற்றும் அவற்றில் இருந்து தங்களை பாதுகாப்பது குறித்து பொது மக்களுக்குத் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பிரச்சாரங்களை அரசு உடனடியாக தொடங்க வேண்டும் மற்றும் அவற்றை கல்வித் திட்டங்களிலும் சேர்க்க வேண்டும். மேலும் இதற்கான முறையான சட்டத்திட்டங்களையும் அரசு உருவாக்க வேண்டும்.

**2. திருச்சிக்கு புதிய இரயில்கள்**

**தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு கோரிக்கை**



திருச்சிராப்பள்ளி இரயில்வே பிரிவின் முக்கிய தலைமையகமாக இருந்தபோதும் இரண்டு இரயில்கள் மட்டுமே அங்கிருந்து புறப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டி திமுக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரஸ் மற்றும் சோழன் எக்ஸ்பிரஸ் சேவைகளுக்கு பிறகு இதுவரை வேறு புதிய சூப்பர் ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் இரயில்சேவைகள் தொடங்கப்படாதது ஏன்? இந்த இரண்டு இரயில் சேவைகளும் தொடங்கப் பட்டு ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது என்பதாவது இரயில்வே அமைச்சகம் அறிந்திருக்கிறதா என்றும் 15 லட்சம் மக்கள் தொகை கொண்ட பெரிய நகரமான திருச்சிராப்பள்ளியை இரயில்வே புறக்கணிப்பதற்கான காரணங்களை விளக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

அதேபோல் திருச்சிக்கும் எழும்பூருக்கும் இடையில் முன்னர் இயக்கப் பட்ட பல்லவன் எக்ஸ்பிரஸ் நீண்ட கால கோரிக்கையை கருத்தில் கொண்டு மீண்டும் இயக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**3. ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் - நடவடிக்கை என்ன?**

**தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா**



ஒன்றிய அரசின் ஆட்சியில் ஊடக சுதந்தரத் திற்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டிருப்பது குறித்து திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

பத்திரிகைகள், சமூக ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளின் வலைத்தளங்கள் சுதந்திரமாக செயல்பட அண்மை காலமாக மிகுந்த தடைகள் உள்ளதை சுட்டிக்காட்டி கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு மாநில வாரியாக, தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட பத்திரிகைகள், சமூக ஊடகங்கள், பத்திரிகைகளின் வலைத் தளங்களின் எண்ணிக்கையை வெளியிட வேண்டும் என கேட்டுள்ள அவர், தடை உத்தரவு மற்றும் அபராதம் விதிக்கப்படுவதற்கு முன்பு உரிய சட்ட நடைமுறை பின்பற்றப்பட்டதா என்றும் கேட்டுள்ளார்.

மக்களாட்சியில் பத்திரிகை சுதந்திரத்தைக் கருத்தில் கொண்டு இது போன்ற தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிராக பல நீதிமன்றங்கள் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளதை கூறி, அத்தகைய நடவடிக்கைகளுக்கான காரணங்களை பகிரங்கமாக வெளியிட வேண்டியதன் அவசியத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

**4. பொது அமைதியை குலைக்கும் போலிச் செய்திகள்! நடவடிக்கை என்ன?**

**வேலூர் கதிர் ஆனந்த் கேள்வி**



அச்சு, காட்சி மற்றும் இணைய ஊடகங்கள் அனைத்திலும் போலிச் செய்திகள் மற்றும் பொருந்தமற்ற செய்திகள் பெருகுவதை குறித்து நாடாளுமன்றத்தில் வேலூர் மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் போலிச் செய்திகளும் அதனால் பல அச்சுறுத்தல்களும் பெருகி வருவதால் பொது அமைதி குலைகின்றது என்பதை குறிப்பிட்டு பேசிய அவர், பொதுமக்கள் அதிக அளவில் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். உடனடியாக அவற்றை சமாளிக்கவும் தடுக்கவும் ஒன்றிய அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் இது தொடர்பாக சட்டம் இயற்றவும் அவர் கோரிக்கை வைத்துள்ளார்.



சென்னை எழிலகத்தில் நேற்று முன்தினம் (19.03.2025) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அ.சக்கரபாணி தலைமையில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கள் துறையின் 2025–2026 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ.சண்முகசுந்தரம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் மோகன், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு காவல்துறை தலைவர் ரூபேஷ் குமார் மீனா மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தோட்டக் கலைப் பொருட்களுக்கான

# குளிர் பதன சேமிப்புக் கிடங்குகள் அமைக்க ஒன்றிய அரசின் உதவி என்ன?

## மக்களவையில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, மார்ச். 21-

“நாடு முழுவதும் உள்ள குளிர்பதன சேமிப்புக் கிடங்குகளின் விவரங்கள், அவற்றின் சேமிப்பு திறன் மாநில, யூனியன் பிரதேச வாரியாக எத்தனை? , குறிப்பாக தமிழ்நாட்டில் எத்தனை இருக்கின்றன?

குளிர்பதன சேமிப்புக் கிடங்குகளின் கட்டுமானம். விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் மற்றும் தோட்டக்கலைப் பொருட்களின் சேமிப்புகளுக்கான மூலதன முதலீட்டு மானியம் திட்டத்தின் கீழ், கடன் செலுத்தி முடித்த பின் மானியம் என்ற வகையில், வழங்கப்பட்ட கடன்களின் விவரம் மாநில வாரியாக என்ன?

மேலும் இத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மற்றும் உதவி செய்யப்பட்ட குளிர்பதன சேமிப்புக்



கிடங்குகளின் விவரங்கள், தமிழ்நாடு உட்பட, மாநில வாரியாக என்ன?” ஆகிய கேள்விகளை எழுத்துபூர்வமாக திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி மார்ச் 18 ஆம் தேதி எழுத்துபூர்வமாக எழுப்பியிருந்தார்.

இந்த கேள்விகளுக்கு ஒன்றிய விவசாய மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர் ராம் நாத் தாகூர் அளித்த பதிலில் “தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் 3 கோடியே 97 லட்சத்து 8 ஆயிரத்து 361 மெட்ரின் டன் அளவுக்கு பழங்கள், காய்கறிகளை சேமித்து வைக்கக் கூடிய 8 ஆயிரத்து 760 குளிர் பதன சேமிப்புக் கிடங்குகள் உள்ளன.

குறிப்பாக தமிழ்நாட்டில் 3 லட்சத்து 99 ஆயிரத்து 690 மெட்ரின் டன் அளவுள்ள பழஙகள், காய்கறிகளை சேமித்து வைக்கும் அளவுக்கு 188 குளிர் பதன சேமிப்புக் கிடங்குகள் உள்ளன. :

குளிர்பதன சேமிப்புக் கிடங்குகளின் கட்டுமானம். விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் மற்றும் தோட்டக்கலைப் பொருட்களின் சேமிப்புகளுக்கான மூலதன முதலீட்டு மானியம் திட்டத்தின் கீழ் நாடு முழுதும் 1 கோடியே 55 லட்சத்து 38 ஆயிரத்து 925 மெட்ரிக் டன் மதிப்புள்ள காய்கறிகள், பழங்களை சேமிக்கும் வண்ணம் 3 ஆயிரத்து 402 குளிர் பதன சேமிப்பு வசதித் திட்டங்களுக்காக 176862.87 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கு இத்திட்டத்தின் கீழ் 2 லட்சத்து 61 ஆயிரத்து 222 மெட்ரிக் டன் அளவுள்ள குளிர் பதன கிடங்குகளை அமைக்கும் 72 திட்டங்களுக்கு 3135.72 லட்சம் ரூபாய் நிதி உதவி செய்யப்பட்டுள்ளது” என குறிப்பிட்டுள்ளார் ஒன்றிய அமைச்சர்.

## ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய

# ரூ.2.63 இலட்சம் கோடி வந்திருந்தால் கடன் சுமை குறைந்திருக்கும்!

## சட்டபேரவையில் – பா.ஜ.க. உறுப்பினருக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு புள்ளி விவரங்களுடன் பதில்!

**சென்னை, மார்ச். 21**

**சட்டப்பேரவையில் பா.ஜ.க உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசும் போது குறுக்கிட்டு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசுகையில் ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய ரூ.2.63 இலட்சம் கோடி வந்திருந்தால் நாம் கடன் சுமை குறைந்திருக்கும் என்று புள்ளி விவரங்களுடன் பதிலளித்தார்.**

எவ்வளவு பணம் கொடுக்கிறோம் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லிக்கொண்டு வந்தார்கள். ஒன்றிய வரிகளால், நம்முடைய மாநில அரசுக்கு, அவர்கள் சொன்ன devolution-ல் எவ்வளவு நிதி வருகிறது என்று சொன்னார்கள். நிதிப் பகிர்வைப் பொறுத்த வரை, அடுத்தடுத்து வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு நிதிக் குழுவும் தொடர்ந்து நமக்கான பங்களிப்பைக் குறைத்துக்கொண்டே வந்திருக்கின்றன. ஒன்பதாவது நிதிக் குழுவில் நமக்கு நிர்ணயிக்கப்பட்ட நிதிப் பகிர்வு விகிதம் 7 சதவிகிதமாக இருந்தது என்று சொன்னால், தற்போது பதினைந்தாவது நிதிக்குழுவில் நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய சதவிகிதம் என்பது வெறும் 4.079 சதவிகிதமாக உள்ளது. அது வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

அதேபோல, devolution-ல் நமக்கு வரவேண்டிய தொகையில், அதாவது நமக்கு legitimate ஆக எவ்வளவு வரவேண்டுமோ அது குறைக்கப்பட்டிருக்கக்கூடிய காரணத்தால், நமது கோரிக்கை நிராகரிக்கப் பட்டுள்ள காரணத்தால், தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய சுமார் 2.63 இலட்சம் கோடி ரூபாய் இதுவரை நமக்கு வராமல் நிதியிழப்பு ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மாநில அரசு வாங்கக்கூடிய கடன்தொகையில் இந்தத் தொகை மட்டும் சுமார் 32 சதவிகிதமாகும். அதாவது, 2.63 இலட்சம் கோடி ரூபாய். நிதிக்குழு நமக்கு இதனைக் கொடுத்திருந்தால், devolution-ல், நமக்கு கடன் அதிகமாக வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. நீங்கள் அங்கேயே அதனைத் தரவில்லை. நாட்டின் மக்கள்தொகையில் 6.1 சதவிகிதத்தைக் கொண்டிருக்கக்கூடிய தமிழ்நாட்டுக்கு 4.07 சதவிகிதம் மட்டுமே கொடுக்கிறீர்கள்.

நிதிப் பங்கீட்டினைக் குறைவாகப் பெறக்கூடிய மாநிலங்களில், நாம் மூன்றாவது இடத்தில், மிகக் குறைவான இடத்தில் இருக்கிறோம். நீங்கள் ஒன்றிய அரசிடமிருந்து வரக்கூடிய நிதிப் பகிர்வையும் குறைக்கிறீர்கள்; இன்னொரு பக்கம், நம்முடைய ஒன்றிய அரசு செயல்படுத்தக்கூடிய திட்டங்களில் மாநில அரசுகளுக்கு அளிக்கவேண்டிய மத்திய அரசின் பங்களிப்பையும் தொடர்ந்து குறைத்துக்கொண்டே வருகிறீர்கள்.

உதாரணத்திற்கு, 2015-2016 ஆம் ஆண்டில் GSDP-ல் 1.6 சதவிகிதமாக இருந்த ஒன்றிய அரசின் உதவி மானியங்கள், 2024-2025 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 0.66 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. இவ்வாறு நிதியைக் குறைத்துக் கொடுத்த ஒரே காரணத்தால், ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்பு வரக்கூடிய இனங்களில் நீங்கள் குறைத்திருப்பதன் காரணமாக, 2015-2016 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நமது மாநிலத்திற்கான நிதி இழப்பு மட்டும் சுமார் முப்பதாயிரம் கோடி ரூபாய்.

அதுபோலவே, நான் ஏற்கெனவே சொன்னது போல, Samagra Shiksha Abhiyan திட்டத்தில் 2,152 கோடி ரூபாயை மத்திய அரசு கொடுக்கவில்லை. மகாத்மா காந்தி ஊரக



வேலைவாய்ப்பு திட்டத்தில் 3,796 கோடி ரூபாய் கொடுக்கவில்லை. Jal Jeevan Mission திட்டத்தின்கீழ் ஏறத்தாழ மூவாயிரம் கோடி ரூபாயை இன்றுவரை மத்திய அரசு நிலுவையில் வைத்திருக்கிறது. அந்தத் திட்டத்தைத் தொடர்ச்சியாக செல்படுத்துவதற்கு மாநில அரசு தற்போது தனது சொந்த நிதியை அளித்துக் கொண்டிருக்கிறது.

So, உங்களுடைய நிதியை, அதாவது, எந்தெந்தத் திட்டங்களுக்கெல்லாம் உங்களுடைய நிதி அளிக்கப்பட்டு வருகிறதோ, அந்தந்தத் திட்டங்களுக்கான உங்களுடைய நிதியையெல்லாம் நீங்கள் மாநில அரசுகள்மீது தொடர்ச்சியாக சுமத்திக்கொண்டே வருகிறீர்கள்.

**ஒன்றிய அரசின் பங்களிப்பு குறைவு!**

பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம், PMAY-Gகிராமப்புறங்களில் இருக்கக்கூடிய rural housing scheme என எல்லா திட்டங்களிலும் உங்களுடைய பங்களிப்பை நீங்கள் குறைத்துக்கொண்டே வருகிறீர்கள். என்னிடத்தில் நிறைய புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் நீங்கள் கொடுத்து வரும் நிதியைக் குறைத்துக்கொண்டே வருகிறீர்கள் என்பதை நான் உங்களுக்கு எடுத்துக் காட்டுகளுடன் கூற விரும்புகிறேன். 2021-2022 ஆம் ஆண்டு உங்களுடைய பங்களிப்பு 46 சதவிகிதம்; மாநில அரசின் பங்களிப்பு 54 சதவிகிதமாக இருந்தது. 2022-2023 ஆம் ஆண்டு உங்களுடைய பங்களிப்பை 44 சதவிகிதமாகக் குறைத்தீர்கள்; மாநில அரசின் பங்களிப்பை 56 சதவிகிதமாக உயர்த்தினீர்கள். 2023-2024 ஆம் ஆண்டு உங்களுடைய பங்களிப்பை 41 சதவிகிதமாகக் குறைத்தீர்கள்; மாநில அரசின் பங்களிப்பு 59 சதவிகிதமாக உயர்த்தினீர்கள். தற்போது, நீங்கள் Budget Estimate-ல், உங்களுடைய பங்களிப்பை 43 சதவிகிதமாகவும், மாநில அரசின் பங்களிப்பு 57 சதவிகிதமாகவும் உள்ளது. உங்களுடைய பங்களிப்பு தொடர்ச்சியாகக் குறைந்து வருவதை இந்த புள்ளிவிவரம் காட்டுகிறது.

அதேபோன்று, ஒன்றிய அரசின் மானியங்கள் குறித்து பார்த்தீர்களென்றால், தமிழ்நாட்டிற்கு Cess and surcharges-ஐ பொறுத்த வரையில், உங்களுக்கே தெரியும், ஒரு பக்கம் GST right, Cess and surcharges வாங்குகிறீர்கள். அதில் கிட்டத்தட்ட 20 சதவிகிதத்திற்குமேல் எடுத்துக் கொள்கிறீர்கள. தற்போது தமிழ்நாட்டிற்கு 23,834 கோடி ரூபாய் கொடுக்கிறீர்கள். SSA funds நீங்கள் கொடுப்பது என்று நாங்கள் எடுத்துக்கொண்டாலும்கூட, 23,834 கோடி ரூபாய் எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், உத்தரப்பிரதேசத்திற்கு 87,915 கோடி ரூபாயும், பீகாருக்கு 54,525 கோடி ரூபாயும் கொடுக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் Hon. Minister of Home Affairs அவர்களே, கடந்த ஜூன் மாதம், ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்கு ஒன்றிய அரசு ஏறத்தாழ 3 இலட்சம் கோடி ரூபாயை வழங்கியுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று, ஒன்றிய அரசின் நிதியமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையில் பீகார் மாநிலத்தைப் பற்றி 6 முறை குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார் என்பதையும், தமிழ்நாட்டின் பெயரை ஒருமுறைகூட அவர் குறிப்பிட்டுப் பேசவில்லை என்பதையும் நான் உங்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இப்படி நான் தொடர்ச்சியாக சொல்லிக்கொண்டே போகலாம்.

Railway budget-ஐ எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டிற்கு கடந்த மூன்று வருடங்களில் 19,068 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், உத்தரப்பிரதேசத்திற்கு ஒரேயொரு வருடத்தில் எவ்வளவு ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள் தெரியுமா? 19,858 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள், இரயில்வே திட்டங்களுக்காக, மூன்று வருடங்களில் தமிழ்நாட்டிற்குக் கொடுத்திருப்பது 19,068 கோடி ரூபாய் என்றால், உத்தரப்பிரதேசத்திற்கு ஒரே வருடத்தில் மட்டும் 19,858 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறீர்கள்.

**உறவுக்கு கை கொடுப்போம்! உரிமைக்கு குரல் கொடுப்போம்!**

National Highways, தேசிய நெடுஞ்சாலைகள் திட்டத்திற்கு, தமிழ்நாட்டிற்கு கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை நான்கு வருடங்களுக்கு 22,460 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், உத்தரப்பிரதேசத்திற்கு 2023-2024 ஆம் ஆண்டில் மட்டும் 28,114 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. 80% of the amount-ஐ single ஆக ஒரே சமயத்தில் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். நிறைய விவரங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. எனவே, நிறைய திட்டங்களுக்கான நிதியை ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்காமல் நிலுவையில் வைத்திருக்கிறது. நாங்கள் அதுகுறித்து கேட்டால், நீங்கள் இணக்கமாக இல்லை என்று சொல்கிறீர்கள். எங்களுடைய கொள்கையே, உறவுக்குக் கை கொடுப்போம்; ஆனால், உரிமைக்கு நிச்சயமாகக் குரல் கொடுப்போம் என்பதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய உரிமையையும், எங்களுடைய மொழி உரிமையையும், எங்களுடைய மொழிக் கொள்கையையும் விட்டுக்கொடுத்து விட்டுத்தான், சமரசம் செய்து கொண்டுதான் இந்தத் தொகையை நாங்கள் பெற வேண்டுமென்றால், முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இருக்கின்ற இந்த அரசு அதற்கு ஒருபோதும் தயாராக இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு புள்ளி விபரங்களுடன் பதிலளித்தார்.

## நியாய விலைக் கடைகள் மூலம் பொருட்களை

# வீட்டிற்கே சென்று வழங்கும் திட்டம் அரசின் செயல்முறையில் இருக்கிறது!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

சென்னை, மார்ச் 21 -

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது அமைச்சர் அர.சக்கரபாணி கூறுகையில் நியாய விலைக் கடைகள் மூலம் பொருட்களை வீட்டிற்கே சென்று வழங்கும் திட்டம் அரசின் செயல்முறையில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

இது குறித்த விவாதம் வருமாறு:-

**கே.ஏ. செங்கோட்டையன்:** உறுப்பினர் காந்தி பேசுகிறபொழுது இரவு நேரங்களில் வருகின்றவர்களுக்கும், நேரம் கழித்து வருகின்றவர்களுக்கும் உணவுப் பொருட்கள் கிடைப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள். கர்நாடகா மாநிலத்தில் அப்படியல்ல. அங்கேயிருக்கின்ற பெரிய மளிகை கடைகளில் ஆங்காங்கே எவ்வளவு ration cardகள் இருக்கிறதோ அதற்கான உணவுப்பொருள்கள் அவர்களி டத்திலே ஒப்படைக்கப்படுகிறது. ஒப்படைத்து, எந்த நேரம் வேண்டுமானாலும் அவர்



கள் பொருள்களை வாங்குகிறபோது, இதையும் சேர்த்து வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, நடைமுறையில் இருப்பதாக சொல்கிறார்கள். அதைப்போன்ற செயல்களை இந்த அரசு செய்வதற்கு முன்வருமா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**பேரவைத் தலைவர்:** என் தொகுதியிலும் 30 க்கும் மேற்பட்ட கிளை கடைகள் இருக்கின்றன. அதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இப்போது உறுப்பினர் அவர்களுக்கு பதில் சொல்லுங்கள்.

**அமைச்சர் அர.சக்கரபாணி:** உறுப்பினர் சொன்னதுபோல, ஆந்திராவிலும் இதுபோன்றுதான் நகரும் நியாய விலை கடைகள்மூலம் வீட்டிற்கே சென்று பொருள்களை வழங்கும் திட்டம் அரசின் செயல்முறையில் இருக்கிறது. வருகின்ற 20 ஆம் தேதி எங்களுடைய துறையின் அதிகாரிகள் ஆந்திரா, தெலுங்கானா மற்றும் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று, நியாய விலைக் கடைகள் மற்றும் பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகளைப் பற்றி ஆராய்வதற்காக செல்ல இருக்கிறார்கள். அவர்கள் அறிக்கையினை தருகின்ற நேரத்திலே அதை எப்படி செயல்படுத்தலாம் என்பதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அதை செயல்படுத்துவோம். பேரவைத் தலைவர் அவர்கள் தொகுதியில் நிறைய கடைகள் வாங்கிவிட்டீர்கள். இன்னும் என்ன கடை உள்ளது?

**பேரவைத் தலைவர்:** ராதாபுரத்தில். . .

**அமைச்சர் அர.சக்கரபாணி:** 2, 3 நாட்களுக்கு முன்புகூட, NPHH முன்னுரிமையற்ற cardஐ முன்னுரிமை உள்ள card ஆக ஒரு நபருக்கு நீங்கள் கொடுத்து வாங்கியுள்ளீர்கள். அப்படி நீங்கள் மக்களுக்கு சேவை செய்துகொண்டிருக்கிறீர்கள்.

**பேரவைத் தலைவர்:** புதிதாக 40 கடைகள் அங்கு இருக்கின்றன. மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்து வாங்கித் தாருங்கள்.

**அமைச்சர் அர.சக்கரபாணி:** பேரவைத் தலைவர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் தொடர்புகொண்டு, தகுதியிருக்கின்ற அத்தனை கடைகளையும் பிரித்து தருவதற்கு அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.